உ

கடவுள் துணை.

மண்டலபுருடோத்தமன்

திருவாய்மலர்ந்தருளிய

சூடாமணி நிகண்டு.

முதலாவது

தெய்வப்பெயர்த்தொகுதி



சுத்தப்பிரதி. 1-ம்பதிப்பு.

அமரம்பேடு

இரங்கசாமிமுதலியார் அண்டுசன்ஸ்

அவர்களாற்றமது

பூமகள்விலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

நெ. 24. தாண்டவராயபிள்ளைவீதி

சென்னை.

1905.

விலை] [அணா-1

ந்திரிக் குச்சதுரு பாயமே பெலநீதி
மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெலமட வியர்க்குநிறை
மானமிகு கற்பே பெலம்
தந்திர மிகுத்தகண சேவகர் தமக்கெலாஞ்
சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோர்
தமக்குநிறை கல்வி பெலமாம்
வந்தனை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம்
வாலவடி வான வேலா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (உரு)

இருந்தும் பயன்படாதவை.

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
றந்தெனத ராம லென்ன
தாரா தர மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கி லென்ன
பெருமையுட னுண்மையில் லாதவொரு பிள்ளையை
பெற்றென்ன பெறாம லென்ன
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
பிடித்தென்ன விடுக்கி லென்ன
தெருளாக மானமில் லாததொரு சீவனஞ்
செய்தென்ன செயாம லென்ன
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
சிறந்தென்ன முறிந்து மென்ன
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தென்ன வாரா மலென்ன
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே. (உசு)

உ

கடவுள் துணை.

மண்டலபுருடோத்தமன்
திருவாய்மலர்ந்தருளிய

சூடாமணி நிகண்டு.

முதலாவது
தெய்வப்பெயர்த்தொகுதி.

—(*)—



[இதன் விலை அணா-1]

அ-இரங்கசாமிமுதலியார் அண்டு சன்ஸ்
அவர்களாற்றமது
பூமகள்விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.
நெ 24 தாண்டவராயபிள்ளை வீதி
சென்னை.

1905.

உ

கடவுள் துணை.

பிரசித்தப்பத்திரிகை.

——]*[——

கனம்பொருந்திய உபாத்திமார்களுக்கும், மற்றவர்களுக்கும், வந்தனத்துட னறிவிப்ப தியாதெனில்,

இதனடியிற் கண்ட புத்தகங்களைச் சிறுவர்களுக்குச் சுலபமாய்ப் பாடஞ்சொல்லுவிக்கச், சொற்களைப்பிரித்தும், பாடபேதம், சந்தச்சிதைவு, எழுத்துக்குற்ற முதலியவைகளை நீக்கிச் சுத்தபாடமாக வெகு நாணயமா யச்சிட்டிருக்கின்றன.

பட்டினத்தார்பாடல்	0	1	0
மேற்படிபாடல்(சரித்திரத்துடன்)ராயல்	0	4	6
வாக்குண்டாம்	0	1	0
ஆத்திசூடி	0	1	6
அருணகிரியந்தாதிமூலம்	0	1	0
மேற்படியந்தாதிஉரை	0	2	0
குமரேசசதகம்	0	2	0
அறப்பளீசுரசதகம்	0	2	0
பட்டினத்தார்புலம்பல்	0	1	0
பத்திரகிரியார்புலம்பல்	0	1	0
ஷை புலம்பல் (சரித்திரத்துடன்) ராயல்	0	2	0
சேந்தன்திவாகரம்	0	1	0
திருவேங்கடமாலை	0	1	0
தண்டலையார்சதகம் (சரித்திரத்துடன்)	0	1	0
திருவேங்கடசதகம்	0	2	0
சூடாமணிநிகண்டு	0	1	0
திருப்புகழ்150பாடல்சந்தக் கொழிப்புடன்	0	4	0

அ. இரங்கசாமிமுதலியார் அண்டுசன்ஸ்

பூமகள்விலாசம்பிரஸ்

நெ 24 தாண்டவராயபிள்ளைவீதி

சென்னை.

உ

கடவுள் துணை.

சூடாமணி நிகண்டு.

சிறப்புப்பாயிரம்.

பொன்னுநன் மணியு முத்தும்
　புனைந்தமுக் குடை நிழற்ற
மின்னுபூம் பிண்டி நீழல்
　வீற்றிருந் தவனை வாழ்த்தி
மன்னிய நிகண்டு சூடா
　மணியென வொன்று சொல்வ
னின்னிலந் தன்னின் மிக்கோர்
　யாவரு மினிது கேண்மின். (க)

பூமலி யசோகி னீழற்
　பொலிந்தவெம் மடிகண் முன்னு
ளேமமா முதனூல் சொல்லக்
　கணதா ரியன்ற பாவாற்
றொமொரு வழிநூல் சொல்லச்
　சார்புநூல் பிறருஞ் சொல்லத்
தோமிலா மூன்று நூலுந்
　துவமென வுதித்தவென்றே. (உ)

அங்கது போய பின்றை
　யலகினூல் பிறந்த மற்றுஞ்
செங்கதிர் வரத்திற் றோன்றுந்
　திவாகரர் சிறப்பின் மிக்க

பிங்கல ருரை நூற் பாவிற்
　பேணினர் செய்தார் சேர
விங்கிவை யிரண்டுங் கற்க
　வெளிதல வென்று சூழ்ந்து. (௩)

சொல்லொடு பொருளு ணர்ந்தோன்
　சேர்திட நீதி வல்லோ
னல்லறி வாள னெங்க
　ணறுங்குன்றை ஞானமூர்த்தி
பல்லுயிர்க் கொருதா யாகும்
　பரமன்மா முனிவன் மெய்ந்நூல்
வல்லுநர் வல்லார்க் கெல்லாம்
　வரையறத் தரையில் வந்து. (௪)

பரிதியொன் றுதயஞ் செய்து
　பங்கய மநேக கோடி
முருகெழ மலர்வித் தென்ன
　முகமுட னகம லர்த்தி
மருவுமுத் தமிழை முன்னாள்
　வளர்த்தபாண் டியனே போலக்
கருதிய வெல்லாந் தந்து
　கவிமணி மாலை சூடி. (௫)

செகமெனும் பளிங்கு மாடத்
　திகிரிவேந் தரையே போலப்
புகழெனும் பஞ்சி சேர்த்திப்
　பொலிவுறு பேரத் தாணி
மகிழ்குண பத்ர னெங்கள்
　வழித்தெய்வம் போல்வான் சொல்ல

விகபுர மிரண்டும் வேண்டி
  யியலிசை வல்லோர் கேட்ப. (௬)

விரவிய தேவர் மக்கள்
  விலங்கொடு மரமி டம்பல்
பொருள் செயும் வடிவு பண்பு
  போற்றிய செயலொ லிப்பே
ரொருசொற்பல் பொருளி னோடு
  முரைத்தபல் பெயர்க்கூட் டந்தான்
வருமுறை திவாகரம்போல்
  வைத்துப்பிங் கலந்தை தன்னில். (௭)

ஒருங்குள பொருளு மோர்ந்திட்
  டுரைத்தனன் விருத்தந் தன்னி
லிருந்தவை நல்லோர் குற்ற
  மியம்பிடா ரென்ப தெண்ணித்
திருந்திய கமல வூர்தி
  திருப்புகழ் புராணஞ் செய்தோன்
பரந்தசீர் குணபத் திரன்றாள்
  பணிந்தமண் டலவன் றனே. (௮)

சிறப்புப்பாயிரம்.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சூடாமணி நிகண்டு.

முதலாவது.

தெய்வப்பெயர்த்தொகுதி.

[அருகன் பெயர்.]

அநகனெண் குணனிச் சிந்த
னறவாழி வேந்தன் வாமன்
சினன்வர னுறுவன் சாந்தன்
சினேந்திர னீதி நூலின்
முனைவன்மா சேநன் றேவன்
மூவுல குணர்ந்த மூர்த்தி
புனிதன்வென் றோன்வி ராகன்
பூமிசை நடந்தோன் போதன். (௧)

பண்ணவன் கமல வூர்தி
பரமேட்டிகாதி வென்றோன்
புண்ணியன் புலவன் புத்தன்
பூரணன் பொன்னெயிற்கோன்
விண்ணவன் விமலன் வீரன்
விநாயகன் வீதசோக
னண்ணல்வின் மதனை வென்றோ
னருட்கொடி வேந்த னுசான். (௨)

முத்தன்மா முனிக ருத்தன்
முக்குடைச் செல்வன் முன்னோன்
சித்தனென் சிறப்பு முள்ளோன்
றிகம்பரன் கொல்லா வேத

வித்தனின் மலனின் றும
　விராயுத னேமி நாத
னத்தனு னந்தன் சோதி
　யரியணைச் செல்வ னாதி (௩)

ஆத்தன்குற் றங்க ளில்லா
　னசோகமர் கடவு ளாதன்
சாத்தன்வே தாந்த னாதன்
　சமியனு மயன் சயம்பு
நீத்தவன் பிதாவி தாதா
　நிரம்பர னனந்த ஞானி
தீர்த்தன்மால் பகவன் சாமி
　சீபதி சீமான் செய்யோ. (௪)

நிருமலன் வரதன் சாது
　நிரஞ்சனன் விறலோன் யோகி
தருமரா சன்யு காதி
　சதுர்முகன் சாத ரூபி
திருமறு மார்ப னீடு
　சிவகதிக் கிறைதொண் ணூறே
யருகன்பேராகுமற்று
　மபிதான மனந்த மாமே. (௫)

[அரன் பெயர்.]

சங்கர னிறையோன் சம்பு
　சதாசிவன் பேயோ டாடி
பொங்கர வணிந்த மூர்த்தி
　புராந்தகன் பூத நாதன்
கங்கைவே ணியன் கங் காளன்
　கடுக்கையங் கண்ணி சூடி

மங்கையோர் பாகன் முன்னோன்
  மகேச்சுரன் வாமதேவன் (கூ)

நீலகண் டன்மா தேவ
  னிருமலன் குன்ற வில்லி
சூலபாணியனீ சானன்
  பசுபதி சுடலை யாடி
காலகா லன்க பாலி
  யுருத்திரன் கைலையாளி
யாலமர் கடவு ளித்த
  னைம்முகன் பரசுபாணி. (எ)

அந்திவண் ணன்முக் கண்ண
  னழலாடி பாண்ட ரங்கன்
சந்த்ரசே கரனு னந்தன்
  சடைமுடி யானந்த னாதி
தந்தியீ ருரியோ னம்பன்
  றற்பர னீற ணிந்தோ
னந்தியீச் சுரனே றூர்ந்தோ
  னக்கன்மா ஞான மூர்த்தி. (அ)

வரன்மறை முதலி யோகி
  மானிட மேந்தி சோதி
பிரமன்மாற் கரியோன் றூணு
  பிஞ்ஞகன் பினாக பாணி
பரமனெண் டோளன் கூற்றைப்
  பதைத்திட வுதைத்த பாத
னரனது நாம மாறைந்
  திரட்டியா மானந்த மற்றும். (கூ)

[பலதேவன் பெயர்.]

இலகுமோர் குண்ட லன்மற்
றிரேவதி கொண்கன் முற்று
நிலவிய முசலி வெள்ளை
நீலவம் பரன நந்த
னலமுறு படையாக் கொண்டோ
னச்சுதன் முன்னர் வந்தோன்
பலபத்ரன் காம பாலன்
பனந்தாமன் பலதே வன்பேர். (௰)

[அரியின் பெயர்.]

மாதவன் மாயன் செய்ய
வாமனன் வா சுதேவன்
சீதர னந்த கோபன்
றிருமக னுவண மேற்ற
கேதனன் பதும நாபன்
கேசவன் பஞ்சவர்க்குத்
தூதனே சாரங்க பாணி
சுரிமுகச் சங்கமேந்தி. (௧௧)

கொண்டல்வண் ணன்கா குத்தன்
கோவிந்த னச்சு தன்மால்
விண்டுவே லையிற்று யின்றோன்
விரகினுலுந்தி பூத்தோன்
வண்டுழாய்மௌலி யாதி
வராகன் வைகுந்த நாதன்
முண்டகா சனைகேள் வன்றா
மோதரன் முராரிநேமி. (௧௨)

வலவன்றே வகிதன் மைந்தன்
　வலிமாலி படியிடந்தோன்
சலசலோ சனனந்த
　சயனன்பீ தாம்ப ரன்பே
ருலகளந் தருள்வோன் பஞ்சா
　யுதனுல குண்ட பெம்மா
னலகைதன் முலையோ டாவி
　யருந்தினே னரசிங்கன்	(கங)

அரவணைச் செல்வன் கண்ணே
　னறியிதுயி லமர்ந்த மூர்த்தி
பிரமனைப் பெற்ற தாதை
　பின்னைகேள் வன்மு குந்தன்
கரியவ னெடியோன் காவற்
　கடவுளா ரணனே ழேழே
யரிவின்பே ராகு மற்று
　மபிதாந மானந்த மாமே.	(கச)

[பிரமன் பெயர்.]

பிரமன்மே தினிப டைத்தோன்
　பிதாமகன் பிதாவி தாதா
வரனயன் மலரோ னிந்த
　மண்பொதுத் தந்தைவேத
னிரணிய கருப்பன் போத
　னினியமா லுந்திவந்தோன்
குரவனே திமமு யர்த்த
　கொடியினை னன்ன வூர்தி.	(கரு)

இறைதா நந்த னீண்ட
　வெண்கணன் விதிச யம்பு

மறையவ னனந்தன் ஞானி
 மான்மகன் வாணி கேள்வன்
முறைதெரி பகவன் வானோர்
 முதுவனுன் முகன்விரிஞ்ச
னறைமலி கமல யோனி
 நாமமா றைந்து மாமே. (கசு)

[புத்தன் பெயர்.]

தருமரா சன்மு னீந்திரன்
 சினன்பஞ்ச தாரை விட்டே
யருள்சுரந் தவுணர்க் கூட்டுந்
 ததாகத ஞாதி தேவன்
விரவுசாக் கியனே சாந்தன்
 விநாயகன் சினந்த விர்ந்தோ
னரசுநீ ழலிலி ருந்தோ
 னறிவரன் பகவன் செல்வன். (கள)

அண்ணலே மாயா தேவி
 சுதனக ளங்க மூர்த்தி
நண்ணிய கலைகட் கெல்லா
 நாதன்முக் குற்ற மில்லோ
னெண்ணில் கண் ணுடை யோன்வாம
 னேற்றபுண்ணியத்தின் மூர்த்தி
புண்ணிய முதல்வன் சாந்தன்
 பூமிசை நடந்தோன் புத்தன். (கஅ)

[இந்திரன் பெயர்.]

மேகவா கனன்வேள் விக்கு
 வேந்தவிண் முழுது மாகி

பாகசா தனனே வச்ர
பாணிகோ பதிசி றப்பா
நாகநீ ணகர்க்கு நாத
ளுன்மருப் பியானை யூர்தி
போகிவா சவனே வேந்தன்
புரந்தரன் புலவன் சக்ரன். (கக)

மருதநன் நிலத்து வேந்தன்
மருத்துவன் வானோர் கோமான்
புருகூதன் சகிமணாளன்
புரோகிதன் கௌசி கன்னே
கரியவன் சுனாசீ ரன்றே
கண்டல னுடன்வ லாரி
யரிசதக் கிருது நீண்ட
வாயிரங் கண்ண னிந்திரன். (உ0)

[விநாயகன் பெயர்.]

அங்குச பாசமேந்தி
யம்பிகை தநயன் முன்னோ
னோங்காரன் மூத்தோ னொற்றை
யணிமருப் பின்னே ரம்பன்
கங்கைபெற் றோன்முக் கண்ணன்
கணபதி யீசன் மைந்தன்
வெங்கய முகனே யாகு
வாகனன் விநாயகன் பேர். (உக)

[வீரபத்திரன் பெயர்.]

உக்கிர னழற்கண் வந்தோ
னுமைமகன் சிம்புளானோன்

முக்கணான் சடையோன் யானை
முகவனுக் கிளையோன் வில்லி
செக்கர்வா னிறத்தன் குரோதன்
சிறுவிதி மகஞ்சி தைத்தோன்
மிக்கபத் திரைக்குக் கேள்வன்
வீரபத் திரன்பே ராமே. (௨௨)

[கந்தன் பெயர்.]

முருகன்வேள் சுவாமி யாறு
முகன்குகன் குழகன் மாயோன்
மருகன்சேய் கார்த்தி கேயன்
வரைபக வெறிந்தோன் செட்டி
யறன்மகன் கங்கை மைந்த
னாண்டலைக் கொடியு யர்த்தோன்
சரவண பவன்க டம்பன்
றாருகற் செற்றோ னாசான். (௨௩)

வேய்ந்தபூங் குறிஞ்சி வேந்தன்
வேலினுக் கிறைவி சாகன்
சேந்தன்காங் கேயன் செவ்வேள்
சிலம்பன்மா மஞ்ஞை யூர்தி
வாய்ந்தசூர்ப் பகைவன் வள்ளி
மணவாளன் றெய்வ யானை
காந்தனே குமரன் கந்தன்
கலையுணர் புலவ னும்பேர். (௨௪)

[காமன் பெயர்.]

திருமகண்மைந்தன் மாரன்
சித்தசன் சம்ப ராரி

யுருவிலி மன்ம தன்மீ
னுறுகொடி யுயர்த்த தோன்ற
லிரதிகர் தலன்வ சந்த
னெழில்பெறு வேணி லாளி
கருதிய கருப்பு வில்லி
கந்தர்ப்பன் மதன்பூ வாளி. (௨௫)

திங்கள் வெண் குடையோன் றென்றற்
றேரினன் வில்லி மோக
னைங்கணைக் கிழவ னெய்யு
மலர்க்கணை வேள் நங்கன்
செங்கண்மான் மைந்தன் மிக்க
திறன்மனோ பவன்ம நோச
னங்கசன் மனுேபு வேணி
ராழிவெம் முரசோன் காமன். (௨௬)

[வைரவன் பெயர்.]

முத்தனே குமாரன் பிள்ளை
முடுவல்வெம் படையோன் காரி
சித்தன்கேத் திரபா லன்னே
செந்தொடைக் குரிய கோமான்
வித்தகன் ஞாளி யூர்தி
விறற்கருங் குதிரை யாளி
வைத்தசீர் வடுக னின்ன
வைரவ னும மாமே. (௨௭)

[ஐயனார் பெயர்.]

காரியே புறத்த வன்பூங்
கடல்வண்ண னெடிய சாத்தன்

பூரணை கேள்வன் யோகி
புட்கலை தன்மணாள
னொருமா சாத்தன் செண்டா
யுதன்வெள்ளை யானை யூர்தி
யாரிய னறத்தைக் காப்போ
னரிகர குமர னையன். (உ அ)

[குபேரன் பெயர்.]

அரனுடைத் தோழ னேகிங்
கரர்பிரா னளகை யாளி
புருடவா கனனே செய்ய
புட்பக விமான முள்ளோ
னிருநிதிக் கிழவன் மந்திரி
பிங்கல னியக்கர் கோமான்
மரகதன் றனதன் மற்றை
வச்சிர வணன்குபேரன். (உ௯)

[யமனுக்கும் காலனுக்கும் பெயர்.]

சமன்செங் கோற் கடவுள் கூற்றுத்
தருமனெனத் தகனே சண்ட
னமன்வைவச் சுதனே மற்றை
நடுவனே தென்றிசைக்கோன்
யமனரி மறலி யேமற்
றெருமையூர் தியுமா மிப்பாற்
கமையில்கான் மறன்மடங்கல்
காலன்பா சத்த னும்பேர். (௩௰)

[தருமதேவதையின் பெயர்.]

மரகத வல்லி பூக
மாநிழ லுற்ற வஞ்சி

பரமசுந் தரியி யக்கி
பகவதி யம்மை பெங்க
ளருகணே முடிதரித்தா
ளம்பிகை யறத்தின் செல்வி
தருமதே வதைபே ரம்பா
ளிகையென்றுஞ் சாத்தலாமே. (௩௧

[உமையின் பெயர்.]

அரனிடத் தவள்கா மக்கோட்
டத்தியம் பிகையே மாதா
தருமத்தின் செல்வி தேவி
சாம்பவி மலைம டந்தை
பரசிவை கவுரி முக்கட்
பார்ப்பதி யொடுப வாணி
யுரைகெழு சத்தி நாரி
யுமைபெயர் மூவைந் தாமே.. (௩௨.)

[கங்கைக்கும் காடுகாளுக்கும் பெயர்.]

வரநதி நீடு மந்தா
கிநிதிரி பதகை மற்றைச்
சுரநதி கங்கை பேர்சா
நவிபகி ரதியுஞ் சொல்லும்
பெருகுமூ தணங்கு மோடி
யேசிய கொற்றி சூரி
மருவிய வடுகி மாரி
வடுகன்றாய் காடுகாள் பேர். (௩௩)

[திருமகள் பெயர்]

மாக்கடற் பிறந்த கோதை
மாவரிப் பிரியை செய்யா
ளாக்கம்பொன் பொறிசீ தேவி
யலர்மகள் பொருளின் செல்வி
தாக்கணங் கிளையாள் பூமி
யிலக்குமி கமலை செல்வந்
தேக்குமிந் திரையீ ரெட்டுந்
திருமக ளும மாமே. (௩௪)

[நாமகள் பெயர்.]

கலைமகள் பனுவ லாட்டி
காயத்ரி ஞான மூர்த்தி
யுலகமா தாபி ராமி
யொள்ளிய வெள்ளை மெய்யா
ளிலகுவெண் கமல முற்றாள்
பாரதி யிசைம டந்தை
மலரயன் மனைவி வாக்காள்
வாணிநா மகள்பே ராமே. (௩௫)

[மூதேவியின் பெயர்.]

சேட்டையிந் திரைக்கு மூத்தாள்
சீர்கேடி சிறப்பி லாதாள்
நீட்டியவேக வேணி
நெடுங்காகத் துவச முற்றாள்
கேட்டையே கெடல ணங்கு
கழுதைவா கனிகே டெல்லா
மூட்டிய கலதி தவ்வை
முகடிமூ தேவி யாமே. (௩௬)

[இந்திராணி, இந்திரன்மைந்தன், அமரர்மாதர் இவ்வர்கட்கும், தெய்வமாதர் பொதுவிற்கும் பெயர்.]

பொருவிலிந் திராணி செய்ய
புலோமசை சசிபே ரிஞ்பங்
தருமயி ராணி யிந்திரன்
மனைவிபேர் சாய்ந்தன் மைந்த
னரமக ளரம்பை யென்ப
வமரர்தம் மாதர் பேரே
விரவுசூ ரணங்கு தெய்வ
மெல்லியல் பொதுப்பேர் சொல்லும். (௩எ)

[காளி, இடாகினி, காளியேவல் செய்மகளிர் இவர்களின் பெயர்.]

சூரிமா லினியெண் டோளி
சூலிசண் டிகையே தேவி
வீரிமா தரிகங் காளி
வேதாளி யுமைமா தங்கி
தாருகற் செற்ற தையல்
பைரவி சிவைசா முண்டி
யாரணி வல்ல ணங்கோ
டையையா மளைமுக் கண்ணி. (௩அ)

அலகைவெங் கொடியு யர்த்தாண்
மதுபதி யாளி யூர்தி
யுலவிய மாயையுற்ற
யோகினி காளி நாமம்
வலவைசூர் மகிடனோடு
மாயவ ளிடாகினிப்பே
ரிலகுசங் மினிவஞ் சப்பெண்
காளிதன் னேவல் செய்வோர் (௩௯)

[துர்க்கையின் பெயர்.]

அமரியெண் டோளி வெற்றி
யந்தரி யம்ப ணத்தி
சமரிபா லைக்கி ழத்தி
சயமகள் வீரச் செல்வி
குமரிமா மகிடற் செற்றாள்
கொற்றவை சக்ர பாணி
விமலைவண் கலையா னத்தி
விசையைநா ரணியே விந்தை. (௪௰)

நீலியே நெடிய காத்தி
யாயனி மேதிச் சென்னி
மேலிட் ருற மிதித்த
மெல்லியல் கௌரி யையை
மாலினுக் கிளைய நங்கை
பகவதி வாள்கைக் கொண்டாள்
சூலி சண் டிகையே கன்னி
சுந்தரி துர்க்கை நாமம். (௪௧)

[தேவர் பெயர்.]

அமரர் பண்ணவர்புத் தேளிர்
கடவுள ரண்ட ரும்ப
ரிமையவர் விபுதர் வானோ
ரிலேகரே புலவர் விண்ணோ
ரமுதரா தித்தர் மேலோ
ரையரே சுரரே தீர்த்த
ருமிழ்சுடர் மௌலி சூட்டி
முயர்நிலத் தருவந் தேவர். (௪௨)

[தெய்வத்திற்கும் அசுரர்க்கும்பெயர்.]

ஈனமி லணங்கு புத்தே
 ளேற்றகூற் கடவு டேவே
யானதெய் வதமே தெய்வ
 மானென வுரைப்பர் நூலோர்
தான ரவுண ரோடு
 தைத்தியர் திதியின்மைந்த
ரேனைய வசுர ராகு
 நிசாசர ரென்று மேற்கும். (சந)

[இராக்கதர், விஞ்சையர், கந்தருவர்களின் பெயர்.]

நிருதரே பிசித வூணர்
 நிசாசர ரரக்கர் தீமை
தருமிராக் கதர்பேர் சால
 க ங்கடர் தானு மாகும்
விரவுவிஞ் சையர்பேர் வித்தியா
 தரரேகே சரரு மாங்கந்
தருவர்யாழ் வல்லோ ரேகாந்
 தருவர்கிந் நரரு மாமே. (சச)

[பூதத்திற்கும் பேய்க்கும் பெயர்.]

குறளகிருத் திமமே கூளி
 பாரிடஞ் சாத கஞ்செந்
நெறியில்பூ தப்பே ரைந்தா
 நீள்பிரே தம்வே தாளம்
வெறிமயல் பிசாசு பாசம்
 வியந்தர மண்ணே சோகோ
டறிவழி கழுது கூளி
 யலகைபேய் கடிசா வும்பேர். (சரு)

[ஆகாயத்தின் பெயர்.]

அண்டம்வா னுலகு மங்கு
லந்தர மம்ப ரங்கோ
குண்டலங் ககனங் காயங்
குடிலம்புட் கரம நந்தங்
கண்டிடா வெளியே மீமா
கத்தொடா சினிந பங்கம்
விண்டலம் விசும்பு வேணி
வியோமமா காய மாமே. (௬௬)

[காற்றின் பெயர்.]

வதங்கால் வளிம ருத்து
வாடையே பவநம் வாயு
கூதிர்மா ருதமா கோதை
கொண்டலே யுலவை கோடை
யூதைவங் கூழ்சி றந்த
வொளிசதா கதியு யிர்ப்புக்
காரி கந்த வாகன்
பிரபஞ்சநன் சலநன் காற்றே. (௬௭)

[மேல்காற்று, கீழ்காற்று, வடகாற்று, பனிக்காற்று
சுழல்காற்று இவற்றின் பெயர்]

கோடைமேல் காற்றி னுமங்
கொண்டல்கீழ் காற்றிற் கேற்கும்
வாடையி னுமம் வீசும்
வடகாற்று வடந்தை யென்ப
கூடிய கூதி ரூதை
குளிர்பனிக் காற்றி னுமஞ்
சாடிய சுழல்காற்றின்பேர்
சாரிகை சூறையாமே. (௬௮)

[தென்றற்கும், நெருப்பிற்கும் பெயர்.]

வருதென்கால் சிறுகா றென்றி
  மலயக்கால் வசந்தன் தென்ற
லரிவசுத் தகந னங்கி
  யனலய வாகனன்றீ
யெரிசுசி சிகியே யார
  லியங்குகாற் றிஞ்ச காயன்
கருநெறி கனலி யேயங்
  காரகன் சித்ர பானு. (சகூ)

தழலுதா சனன் சிறந்த
  தனஞ்சயன் சாத வேதாச்
செழுமையை முளரி தென்கீழ்த்
  திசையிறை சேர்ந்தார்க் கொல்லி
யெழுவித நாவே வன்னி
  யேற்றபா வகனே தேயு
வழல்சுடர் ஞெகிழி யின்ன
  நெருப்பின்பே ராரைந் தாமே (ருய)

[ஊழித்தீ, கனலொழுங்கு, விண்வீழ்கொள்ளி
நறுபுகை இவற்றின்பெயர்.]

வடவைதீத் திரண்மடநிகல்
  வருவட வாமுகஞ் சூழ்
கடையன லூழித் தீயாங்
  கனலொழுதுங் கதுசு வாலை
யடைவில்விண் வீழுங் கொள்ளி
  யுற்கையென் றறைய லாமே
வெடிநறை குய்யிம் மூன்று
  மிகுநறும் புகையி னமம். (ருக)

[காட்டழல், தீயைத்தருகோல், விளக்கு, புகை, தீப்பொறி, இவற்றிற்கும், தீத்தெய்வத்திற்கும், தீத்தெய்வத்தின் பாரிக்கும்பெயர்.]

தாவங்காட்டழலத் தீயைத்
தருகோலே ஞெலிகோ லென்ப
தீவிகை தீப மற்றைத்
திகள்சுட ரொளிவி ளக்கே
யாவிதூ பந்தூ மத்தோ
டறிபுகை பொறிபு லிங்கம்
பாவக னத்தீத் தெய்வம்
பாரியே சுவாகா தேவி. (ருஉ)

[நீர், வெள்ளம், வருணன் இவற்றின் பெயர்.]

வாரியா லங்கி லால
மழையலர் கமலங் காண்ட
நீரம்புட கரமே சிந்து
நெடும்புனல் சலிலம் பாணி
காரறல் புவன நாற்ங்
கனவிர தங்க வந்த
மாரியம் புதமே யப்பு
வருணஞ்சி வனம்வ நம்வார். (ருந)

பயமழை யுதகந் தோயம்
பயசு சம்பரம்பா நீய
மயமள கத்தோடாம்
மமுதங்கஞ் சலநீ ராகும்
வியனுறு நீத்தம் வாரி
பிரளயம் வெள்ளத்தின்பேர்
நயனுறு வருண னிந்த
னற்புனல் வேந்த னும்ம். (ருச)

[சூரியன்பரிதியின்வட்டம்கிரணம்இவற்றின்பெயர்]

டரிதிபாற் கரனு தித்தன்
பனிப்பகை சுடர்ப தங்க
னிருள்வலி சவிதாச் சூர
னெல்லுமார்த் தாண்டனென்றா
மருணனு தவனே மித்திர
னுயிரஞ் சோதி யுள்ளோன்
தரணிசெங் கதிரோன் சண்டன்
றபனனே யொளியே சான்றோன் (ருரு)

அனலியே யரியே பானு
வலரியே யண்ட யோனி
கனலினா யிருவி கர்த்தன்
கதிரவன் பகலோன் வெய்யோன்
றினகரன் பகலே சோதி
திவாகர னரிய மாவே
யினனுட னுதயன் மற்றை
யெல்லையே கிரண மாலி. (ருசு)

விரவுமேற் பரியோன் வேந்தன்
விருச்சிகன் விரோச னன்பே
ரிரவிவிண் மணிய ருக்க
னேழேழுஞ் சூரி யன்பேர்
பரிதியின் வட்டந் தானே
விசயமாம் பரிதி வீசுங்
கிரணமே கரமமு மற்றைக்
கிளர்ந்ததீ விரமு மாகும். (ருஎ)

[சந்திரன் பெயர்.]

நிலவுசோ மன்க ளங்க
   னிசாபதி பிறைகு ளிர்ந்த
கலையின னுடுவின் வேந்தன்
   கலாநிதி யொடுகு பேர
னலவனே சசியே திங்க
   ளம்புலி நிசாக ரன்வா
னுலவிம கிரணன் சாந்த
   முற்றதண் ணவன்கு ரங்கி. (௫௮)

மதியிராக் கதிரே யிந்து
   மருவுதா னவனே யல்லோன்
விதுவொடு குமுத நண்பன்
   சுதாகரன் வேந்த னலோன்
சிதைவிலா முயலின் கூடு
   பசுங்கதிர்த் தேவன் றெல்லாம்
புதியசந் திரன்மூ வேழு
   மெட்டுமே புகன்ற நாமம். (௫௯)

[செவ்வாயின் பெயர்.]

கருதிய செந்தி வண்ணன்
   காட்டுமோங் கார கன்சேய்
குருதிவக் கிரனே பௌமன்
   குசனில மகன ரத்தன்
மருவிய வழலோன் மற்றை
   மங்கல னுடனே யாரல்
விரவிய வுதிர னின்ன
   மேவுசெவ் வாயி னுமம். (௬௰)

[புதன் பெயர்.]

சிந்தைகூ ரியன்க ணக்கன்
 றேர்ப்பாக னருணன் சாமன்
வந்தது துவனே மாலே
 மதிமக னறிஞன் பாக
னந்தமாம் புலவன் மற்றை
 யநுவழி மேதை பச்சை
புந்திபண் டிதனீ ரெட்டும்
 புதன்பெய ராகு மன்றே. (௬௧)

[வியாழத்திற்கும், வெள்ளிக்கும் பெயர்.]

நீதிலாத் தெய்வ மந்த்ரி
 சிகண்டிச னமைச்சன் சீவன்
வேதனுண் டளப்பா னுசான்
 வேந்தன்பொன் வியாழத் தின்பே
ரோதிய வசுர மந்த்ரி
 யுசநன்பார்க் கவனே சுங்கன்
கோதில்சுக் கிரன்ப ளிங்கு
 புகர்கவி மழைக்கோள் வெள்ளி (௬௨)

[சனி, இராகு, கேதுக்களின் பெயர்.]

கதிர்மகன் மந்தன் காரி
 கரியவன் சௌரி மேற்கோண்
முதுமகன் பங்கு நீலன்
 குடவனேய் முகன்ச னிப்பேர்
மதியுணு மிராகு நாம
 மற்றது தமங்க றுப்பா
மதிகமாங் கேதுச் செம்மை
 சிகிகதிர் பகையு மாமே. (௬௩)

[மேடம், இடபம், மிதுனம், கடகங்களுக்கும் பெயர்.]

கொண்டமை வருடையாடு
கொறிமறி மேட மென்ப
குண்டைசே ஏூரி புல்லங்
கோவிடை யிடப மாகும்
தண்டியாழ் விழவி ரட்டை
சயமகண் மிதுநந் தானே
நண்டு ஞெண் டலவன் சேக்கை
நள்ளிகர்க் கடக மாமே. (௬௪)

[சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம் இவற்றின் பெயர்.]

கொலையரி யாளி மாவே
கொடும்புலி சிங்க மென்ப
முலைமடந் தையர்பே ரெல்லா
மொழிந்திடுங் கன்னி தானே
துலைநிறை நிறுப்பான் சீர்கோ
றூக்குவா ணிகன்று லாப்பேர்
ருலைவுறு தெறுக்கா றேளே
யோதிய விருச்சி கப்பேர். (௬௫)

[தனசு, மகரம், கும்பம், மீனம் இவற்றின்பெயர்.]

கொடுமரந் துரோணஞ் சாபங்
கொடுஞ்சிலை தநுநாற் பேரே
வடுவின்மான் கலைசு றுவே
மகரரா சிக்கு முப்பேர்
குடமொடு கரீரஞ் சாடி
குடங்கரே கும்ப மென்ப
நெடியமீன் மயிலை மச்சஞ்
சலசர நேரு மீனம். (௬௬)

[அச்சுவினிக்கும், பரணிக்கும் பெயர்.]

பரிமருத் துவனாள் வாசி
பரவுமைப் பசியா ழேரு
டிரலையே முதனான் சென்னி
யென்பதச் சுவினி யின்பேர்
பரணியே கிழவன் சோறு
பகலவன் றராசு தாழி
தருமனா ளடுப்புப் பூதந்
தாசிமுக் கூட்டுத் தானே. (சுஎ)

[கார்த்திகைக்கும், உரோகிணிக்கும் பெயர்.]

எரிபிறந் திடுநா ளாரல்
விருலறு வாய ளக்கர்
கருதுநா ளிதனே யங்கி
கார்த்திகை யளகு மேற்கும்
பிரமனாள் சகடு பண்டி
பேசிய சதியே வைய
முருள் விமா நந்தே ருற்று
லுரோணியே யுரோகிணிப் பேர். (சுஅ)

[மிருகசீரிடத்திற்கும், ஆதிரைக்கும் பெயர்.]

திங்களாண் மதியே ராளன்
சேர்ந்தமான் றலையே மாழ்கு
பொங்குமார் கழியே மும்மீன்
புகழ்நரிப் புரமே பாலை
யிங்கிவை யொன்ப தென்ப
மிருகசீ ரிடத்தி னமஞ்
செங்கைமூ திரையா ழீசன்
றினமிவை யாதி ரைப்பேர். (சுகூ)

[புநர்பூசம், பூசம், ஆயிலியம் இவற்றின் பெயர்.]

கருதியவதிதி நாளே
  கழைபுநர் தங்க ரும்பு
பெருவிலாப் புனிதம் பிண்டி
  யாவணம் புநர்பூ சப்பேர்
குருவினுள் கொடிறு வண்டு
  குறிற்றகாற் குளமே பூச
மரவினுள் கௌவை பாம்பே
  யாயிலா யிலிய காற்பேர். (எ௰)

[மகத்திற்கும், பூரத்திற்கும் பெயர்.]

கொடுநுகம் மேள்வி வாய்க்கால்
  குறித்தவேட் டுவனே மாசி
வடுவற முதலிற் றேன்றி
  வருஞ்சனி மகநா ளென்ப
விடையெழுஞ் சநியே துர்க்கை
  மெலிபக வதிநா ளோடு
கடியநா விதனே யெய்யுங்
  கணையிரு முப்பேர் பூரம். (எக)

[உத்திரத்திற்கும், அத்தத்திற்கும் பெயர்.]

பங்குனி கடையில் வந்து
  பற்றிய சனியி னேடு
செங்கதிர் பிறந்த நாளுஞ்
  சிறந்தவுத் திரமென் றுகும்
தங்குமா மரமே யங்கி
  சார்ந்தநாள் கவுத்துவத் தோ
டங்கைமீன் களிறு நவ்வி
  யைவிர லத்த மேழ்பேர். (எஉ)

[சித்திரைக்கும், சுவாதிக்கும் பெயர்.]

அளக்குநெய் பயிறு மீனே
யறுவையே யாடை தூசு
துளக்கிலா நடுநா டச்சன்
றுவட்டாநாள் சித்தி ரைப்பேர்
விளக்கொடு மரக்கால் வீழ்க்கை
வெறுநுகங் காற்றி னூளே
கிளற்றிய காற்றுத் தீபங்
கேடிலாச் சோதி யேழ்பேர். (எ௩)

[விசாகத்திற்கும், அனுடத்திற்கும் பெயர்.]

முற்றில்வை காசி காற்று
முந்துநாண் முறத்தி னோடு
வெற்றிசேர் சுளகு சேட்டை
விசாகநா ளிருமுப் பேரே
புற்ருளி பெண்ணை தேளே
போந்தைமித் திரநா ளாறுஞ்
சொற்றன ரனுட மென்று
சேர்விலா நூலோர் தாமே. (எ௪)

[கேட்டைக்கும், மூலத்திற்கும் பெயர்.]

சேட்டையிந் திரனாள்வேதி
செந்தழ லெரியிவ் வைந்துங்
கேட்டை வல்லாரை யென்றும்
கிளத்துப வளத்த நூலோர்
தேட்கடை குருகு கொக்குச்
சிலையுட னன்றி லாணி
வீட்டிய வசுர நாளிவ்
வேழ்பெயர் மூல மென்ப. (எ௫)

[பூராடம், உத்திராடம், திருவோணம்,
இவற்றின் பெயர்.]

உடைகுள முற்கு ளங்கீ
ருதித்தநாள் பூரா டப்பேர்
கடையினிற் குளமே யாணி
கருதுவிச் சுவநா ளாடி
மிடையிலுந் திராட மென்ப
மேவிய வோணமாயோ
னடையுநா ளுலக்கை முக்கோல்
சிரவண மாகு நாற்பேர் (எசு)

[அவிட்டத்திற்கும், சதயத்திற்கும் பெயர்.]

மருவிய காகப் புள்ளு
வசுக்கணாள் பறவை புள்ளு
விரவுமா வணிய விட்டம்
விளம்பிய நாம மைந்தாம்
பெருகிய செக்குச் சுண்டன்
பேசிய போரே குன்று
வருணனாள் சதய மைந்தும்
வகுத்தபேர் தொகுத்த தாமே. (எஎ)

[பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி,
இவற்றின் பெயர்.]

பொருவின்முற் கொழுங்கோ லூழி
புரட்டையே பூரட்டாதி
முரசுபிற் கொழுங்கோன் மன்ன
னுத்திரட் டாதி முப்பே
ரிரவிநாள் கலமே தோணி
யேற்றமாந் தொழுவே நாவாய்
பெருகிய கடைநாள் சூலம்
பெருநாளெட் டிரேவ திப்பேர். (எஅ)

[அருந்ததி, விண்மீன், நாழிகை, காலநுட்பம், இவற்றின்பெயர்.]

வடமீனே சாலி யென்ப
மற்றருந் ததியின் பேரே
யுடுவேதா ரகையே பம்மே
யுற்கையே சுக்கை விண்மீன்
கடிகைநா ழிகையாங் கன்ன
லிருத்தையு மதுவே காட்டுந்
துடிகலை விகலை முப்பேர்
சொல்லிப கால நுட்பம். (எகூ)

[காலத்திற்கும், நெடும்போழ்திற்கும் பெயர்.]

வேலையே யமையஞ் செவ்வி
யேல்வையே பொழுது பாணி
காலைகொன் பதமே போழ்து
காலப்பே ரீரைந் தாகுஞ்
சாலநீட் டித்த லோடு
சார்ந்தபா ணித்த ருனு
நீலவுன் கண்ணுய் மற்று
நெடித்தலு நெடும்போழ் தென்ப. (அ0)

[காலவிரைவு, மத்தியானம்ஓரை இவற்றின்பெயர்]

ஒல்லையே யிறையேயுற்ற
சிறுவரை யுடனி லேசம்
வல்லைமாத் திரைகள் கால
விரைவின்பேர் வகுக்கி லாறு
நல்லநண் பகலே யுச்சி
நடுப்பகன் மத்தி யான
மில்லுடன் பவனமோரை
யிராசியு மதுவே யென்ப. (அக)

[இராவுக்கும், பகலுக்கும், நாளுக்கும் பெயர்.]

அல்லிபா வரியே கங்கு
லல்கல்யா மினியே நத்த
மெல்லியோ டியாம மாலை
யிரசனி நிசியி ராவா
மெல்லொடு திவாப்ப கற்பே
ரேல்வையே திவசம் வைக
லல்கலே தினமே யெல்லை
யாகியம் பகலே நாளாம். (அ௨)

[இருள், முன்னைநாள், பின்னைநாள்
இவற்றின் பெயர்.]

கருவரி யந்த காரங்
கச்சளங் தமந்து வாந்த
மிருளென்ப திமிர மோடு
துணங்கற லென்று மேற்கு
நெருநலு நென்ன லுந்தா
னிகழ்த்துப முன்னை நாளே
பெருகிய பின்றை பிற்றை
பின்னையென் றியம்ப லாமே. (அ௩)

[வைகறை, சந்திரிகை, வெய்யில், மாலை,
சாமம், பருவம் இவற்றின் பெயர்.]

புலரிவை கறையி னுமம்
விடியலும் போற்று மப்பேர்
நிலவுசந் திரிகை வெய்யி
னிகழ்ந்தவா தவமே யென்றா
யிலகிய மாலை சாயஞ்
சந்தியாம் யாமஞ் சாம
மலைவறு பருவந் தானே
யானிய மிருது வாகும். (அ௪)

[ஒருகலை, மாதம், சினிவாலி, குகு இவற்றின்பெயர்]

நிதியொடு பக்கந் தானே
யொருகலை தெரிக்கு மென்ப
மதியொடு திங்கள் சொல்லின்
மாதமே பேத மில்லை
மதிதெரி கலையி ரா.வே
வருஞ்சினி வாலி நாம
மதிமறை கலையி ராவின்
வரும்பெயர் குகுவென் றுமே. (அரு)

[பூரணைக்கும், அமாவாசைக்கும், முதற்பக்கந் தொடங்கி மூன்றுவட்டமாக வருகிற ஐந்து பக்கங்களுக்கும் பெயர்.]

அந்தமா முவாவே பௌவம்
பூரணை யிருபே ராகு
மிந்துவோ டிரவி கூட்ட
மமாவாசை யிசையு மென்ப
நந்தைபத் திரையி னோடு
நாட்டிய சயையி ரித்தை
முந்துபூ ரணையாம் பக்க
முதற்றொட்டு மூன்று வட்டம். (அசு)

[ஆவணிமுதல் இரண்டிரண்டு மாதமாகிய அறுவகைப் பருவங்களின் பெயர்.]

பரவிய காரே கூதிர்
முன்பனிப் பனிக ளோடு
விரவிய விளைய வேனில்
விரைந்திடு முதிர்ந்த வேனின்
மருவுமா வணியே யாதி
மற்றிரண் டிரண்டு மாதம்
பருவமூ விரண்டு மாய்ந்து
பார்த்திடின் வாய்த்த பேராம். (அஎ)

[வருடம், அயநம், ஊழிகாலம், வாழ்நாள், அயன் வாழ்நாள், இவற்றின் பெயர்.]

இகழ்வில்வற் சரமே யாண்டே
சமை முப்பேர் வருடமென்ப
பகரிலா யன்மு மப்பே
ரயனமே யாண்டிற் பாதி
யகமுடி வுடன்ம டங்க
லூழியா மாயுள் வாழ்நாள்
மகிழ்வுறு கற்பந் தானே
மலரயன் வாழ்நா ளென்ப. (அஅ)

[மழைக்கும், பெருமழைக்கும், விடா மழைக்கும்பெயர்.]

சொரிதுளி திவலை தூவல்
சீகரந் தூறன் மாரி
வருடமோ டுறையே யாலி
வானமு மழைப்பேர் பத்தாம்
பெருமழை யென்ப தானே
பேசிலா சார மாகும்
விரவிய பனித்தல் சோனை
விடாமழை யிருபேராமே. (அகூ)

[துளி, ஆலங்கட்டி, மேல், கீழ், இவற்றின்பெயர்.]

வாலிய திவலை தூவல்
வண்சிதர் சீக ரத்தோ
டாலியே தளியே மிக்க
வுறைதுளி யாக வேழ்பே
ராலியே கரக மற்றைக்
கனோபல மாலங் கட்டி
மேலினு மந்தா னும்பர்
மேக்குமாங் கிழக்குக் கீழே. (கூய)

[மேகத்தின் பெயர்.]

பயனுறு பங்குல் சீதம்
  பயோதரந் தாரா தாரங்
குயின்மழை யெழிலு மஞ்சு
  கொண்டல்சீ மூதங் கொண்மூ
வியன்முகில் விண்வி சும்பு
  விளையுமால் சலத ரஞ்சொல்
புயல்கனங் கந்த ரங்கார்
  போற்றுமை மாரி மேகம். (கூக)

[இடிக்கும், மின்னலுக்கும் பெயர்.]

வெடியொலி யசனி செல்லு
  விண்ணேறு மடங்க லாறே
யிடியின்பே ருருமு மற்றை
  யனலேறு மிதன்பே ரென்ப
நெடியவித் துருத்த டித்து
  நீள்சம்பை சபலை யோடு
கடியசஞ் சலையே மின்னல்
  கனருசி மின்னி னேழ்பேர் (கூஉ)

[பனி, பரிவேடம், வானவில் இவற்றின்பெயர்]

பனியிமந்துகின முப்பேர் பரிவேடமூர் கோள்வட்டந், தனியிடு வானவில்லேயிந்திர தநுவென்குரு, மினிசவை தேவரீட்டச்செய்யுளூற்றென்றிசைத்தான், புனைகுணபுத்திரன்றுள்போற்று மண்டலவன்றனே.

சூடாமணி நிகண்டு முதலாவது
தெய்வப்பெயர்த்தொகுதி
முற்றிற்று.

உபகார மில்லாதவை.

கடனீர் மிருந்தென்ன வோதிதான் பெருத்தென்ன
 காட்டிலவு மலரி லென்ன
கருவேல் பழுத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
 கானின்மழை பெய்து மென்ன
அடர்கழுதை லத்தி* நிலமெல்லாங் குவிந்தென்ன
 வரியகுண மில்லாத பெண்
ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழை‡பல
 வரியநூ லோதி யென்ன
திடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
 திறன்மிகுங் கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாஞ்
 சித்திரத் துற்று மென்ன
மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
 வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
 மலைமேவு குமரேசனே. (உஎ)

பதரெனப் படுவோர்.

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
 சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
 தம்மொடு சலிக்கும் பதர்
பின்புகா ணுவிடந் தன்னிலே புறணிபல
 பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தைதுயர் படவாழ்ந் திருந்தபதர்
 பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
 பொய்ச்சாட்சி சொல்லும் பதர்
புவியோர் நடத்தையையிகழ்ந்தபதர் தன்மனைவி
 புணர்தல்வெளி யாக்கும் பதர்

---

* லத்தி - சாணம் ‡ ஆஸ்தானகோழை-அச்சமுறு சமஸ்தான வித்துவான்கள்.